ISSN : 2455 - 0531

# இனம்

இனம் இனத்தைச் சேரும்

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
## International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:13 மே 2018

Vol. 4 Issue : 13 May 2018



IIJIF
INTERNATIONAL INNOVATIVE JOURNAL IMPACT FACTOR
DOI: 03-MAR-2018
REF.NO.: IIJIF180301
office@iijif.com
https://iijif.com/
This certicate is valid for 1 year from the date of issue

CERTIFICATE
OF INDEXING AND JOURNAL IMPACT FACTOR [2017-18]
THIS CERTIFICATE IS PRESENTED TO
Inam: International E-Journal of Tamil Studies
e-ISSN: 2455-0531
The above journal has been positively evaluated by our team in IIJIF Journal Impact Factor Evaluation Process.
Journal Impact Factor [JIF-2016-17] JIF : 2.321
MANAGER


ஆ.மணி
அ.மோகனா
இரா.இராஜா
கி.சங்கரநாராயணன்
ப.திருஞான சம்பந்தம்
மு.நாகராஜன்
விஸ்வேஸ்வரன்
மௌ.அஸ்கர் அலி
மா. உமாமகேஸ்வரி
சு.பேச்சியம்மாள்
கு.தனலெட்சுமி
அ.பிரீதா
மு.தமிழ்முல்லை

ரெ.அருணாதேவி
கு.சரஸ்வதி
இரா.வைதேகி
சீ.யுவராஜ்
ந.மாலதி
இரா.பிரசன்னா
ப.மணிகண்டன்
ரா.ராஜராஜன்
நா.மலர்விழி
சே.செந்தமிழ்ப்பாவை
பெ.குபேந்திரன்
பெ.ராஜா
மா.ஆசியாதாரா
வி.மல்லிகா

இல.இராஜதுரை
க.தேவி
மீ.கோமதி
க.ரேவதி
வீ.மீனாட்சி
ம.பெட்ரிக் ஜெபராஜ்
ப.புவனேஸ்வரி
இரா.நித்யலெட்சுமி
சே.முனியசாமி
அ.அனேஜா
வி.வசந்தா
அ.புவியரசு
தி.நிரஞ்சனி
மா.யோகராஜ்
யே.டிலானி
மொ.சபீதாபானு
கா.தினேஷ்
ஆ.ஷைலா ஹெலின்
ம.சந்துரு
வசந்தமணி
பீ.விஜி
த.சத்தியராஜ்
மா.பரமசிவன்

Inam ISSN : 2455 - 0531

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

மே 2018 மலர் : 4 இதழ் : 13
May 2018 Volume IV Issue 13

# உள்ளே ...

தொகுதி - ஒன்று

## தமிழ்ச் செவ்வியல்

ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு : பத்துப்பாட்டுப் பதிப்பா?
முனைவர் ஆ.மணி | 4

பதினோராம் திருமுறை யாப்பு - பதிப்பு : சில குறிப்புகள்
முனைவர் அ.மோகனா | 12

யாப்பியலும் கணக்கியலும்
முனைவர் இரா. இராஜா | 19

வேற்றுமைகள் : மாற்றங்களும் வளர்ச்சிநிலையும்
முனைவர் கி.சங்கர நாராயணன் | 26

கீழ்க்கணக்கில் நேரிசை இன்னிசையாதல்
முனைவர் ப.திருஞானசம்பந்தம் | 34

முற்கால நீதிநூல்கள் சுட்டும் அரச முறைமையும் மக்களின் கடமைகளும்
முனைவர் மு.நாகராஜன் | 40

திருக்குறளில் 'ஆன்மா' என்ற கருத்துக் கூறப்படவில்லை
விஸ்வேஸ்வரன் | 45

தமிழர் சிந்தனை மரபில் அழகியலும் கலைகளும் : சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு
திரவியராசா நிரஞ்சினி | 53

சூழலியல் நோக்கில் சங்க இலக்கியம்
முனைவர் மௌ.அஸ்கர் அலி | 59

பழந்தமிழரின் இயற்கைப் பாதுகாப்பு முறைமைகள்
முனைவர் மா. உமா மகேஸ்வரி | 64

இனவரைவியல் நோக்கில் குறுந்தொகை
முனைவர் சு.பேச்சியம்மாள் | 69

பத்துப்பாட்டில் உழவும் நெல் விளைச்சலும்
கு. தனலட்சுமி | 75

பழந்தமிழரின் போர் முறைகள்
அ.பிரீதா | 79

முல்லைத்திணை - அகப்பொருள் வெளிப்பாடு
மு.தமிழ்முல்லை | 83


பொருநராற்றுப்படையில் கரிகாற்சோழனின் சிறப்புகள்
ரெ. அருணா தேவி | 87

சங்க இலக்கியம் சுட்டும் பழந்தமிழர் தொழில்வளம்
முனைவர் கு.சரஸ்வதி | 92

எட்டுத்தொகையில் குளவி (காட்டு மல்லிகை)
இரா. வைதேகி | 96

...

UGC APPROVED JOURNAL NO: 64244





அகநானூற்றுப் பாடல்கள் காட்டும் தமிழரின் அகவாழ்க்கைச் சிறப்புகள்
சி. யுவராஜ் | 99

அகநானூற்றின் கட்டமைப்பு
ந. மாலதி | 104

குறுந்தொகை முல்லைத்திணையில் மரங்களும் மலர்களும்
இரா. பிரசன்னா | 107

நற்றிணையில் தூதும் மடலும் உணர்த்தும் செய்திகள்
ப.மணிகண்டன் | 111

குறுந்தொகை உணர்த்தும் அறம்
முனைவர் ரா. ராஜராஜன் | 115

நாலடியாரில் 'முதியோர்' பதிவுகள் உணர்த்தும் சிந்தனைகள்
முனைவர் நா. மலர்விழி | 119

சிலப்பதிகாரமும் அரும்பதவுரைகாரரும்
முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை & பெ.குபேந்திரன் | 123

சங்க இலக்கிய நெய்தல் திணைப் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகள்
பெ.ராஜா | 126

வரலாற்று நோக்கில் இடையியல் அமைவுநிலை
முனைவர் மா.ஆசியாதாரா | 130


## தொகுதி - இரண்டு

### காப்பிய இலக்கியம்


ஒப்பியல் நோக்கில் நளன் கதையும் கதைவடிவங்களும்
முனைவர் வி.மல்லிகா | 136

நளன்கதை கூறும் இலக்கியங்கள்
Rajadurai.L | 140


### பக்தி இலக்கியம்


ஆழ்வார் பாசுரங்களில் அரையர் சேவை
க. தேவி | 144

அட்டப் பிரபந்தத்தில் அணிநயம்
முனைவர் மீ. கோமதி | 148

ஆழ்வார் பாசுரங்களில் அணிநலன்கள்
க.ரேவதி | 152


### தற்கால இலக்கியம்


'தவுட்டுக் குருவி' எழுப்பும் கலகக்குரல்
முனைவர் வீ.மீனாட்சி | 155

சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகளில் தொடக்கம் - வளர்ச்சி - முடிவு
ம.பெட்ரிக் ஜெபராஜ் | 159

ரமணிசந்திரன் புதினத்தில் பெண் நிலைப்பாடு
ப. புவனேஸ்வரி | 163

தினமணி இதழும் தலையங்கமும்
முனைவர் இரா. நித்யலட்சுமி | 167


### வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்


முதுகுளத்தூர் சுப்பையாபிள்ளையின் புவனேந்திர காவியமும் அந்நூலுக்குச் சாற்றுக்கவி பாடியோரும்
சே.முனியசாமி | 171

பூகோளத்தின் புதிய சவாலாகும் மின்னணுக் கழிவுகள்
அரியரெத்தினம் - அனேஜா | 182

சீனாவின் முத்துமாலைத் திட்டத்தினால் (One Belt One Road) இலங்கையில் ஏற்படும் விளைவுகள் - பொருளியல் நோக்கு
வினாயகமூர்த்தி - வசந்தா | 192

சேரன்மாதேவி குருகுலத்தின் தொடக்ககாலம்
முனைவர் அ.புவியரசு | 203

செயற்கைமுறை கருக்கட்டலினால் ஏற்படும் தாக்கங்கள் : ஓர் உளவியல் நோக்கு
திரவியராசா நிரஞ்சினி & மா.யோகராஜ் | 213

விசேட தேவையுடைய பிள்ளைகளும், விசேட வழிகாட்டல் ஆலோசனையும்
யேசுஜயா டிலானி & மொகமட் கனீபா சபீதா பானு | 219

வள்ளலார் வகுத்த இனம்
கா. தினேஷ் | 230

சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளின் அரசியல் பின்புலம்
ஆ. ஷைலா ஹெலின் | 233

வரைவிலக்கணங்கள்வழிக் கல்வி எனும் எண்ணக்கருவை ஆராய்தல்
யேசுஜயா டிலானி | 238

ஆரம்பப்பிரிவு மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவம் ஏற்படுத்தும் தாக்கம்
Shandru Mariyadas | 254

பண்டைய சிற்பக் கலையும் அலங்கார வளைவு முறைகளும்
முனைவர் வசந்தமணி இராமலிங்கம் | 265

கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறை - ஓர் அறிமுகம்
பி.விஜி | 269


### நூல் மதிப்பீடு


சொல் நிலம்: வெளிப்பாட்டுத் திறனுரை
த.சத்தியராஜ் | 277

வாழ்வியலறம் + பாலியலறிவு = பண்டைத்தமிழர்
முனைவர் மா.பரமசிவன் | 286


...

மதிப்பிடப்பெற்றது

# இனவரைவியல் நோக்கில் குறுந்தொகை

முனைவர் சு.பேச்சியம்மாள்
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி, அலைபேசி 9788749246
spetchi29@gmail.com

பண்பாட்டு மானிடவியலின் முக்கியமான பிரிவாக இனவரைவியல் அமைந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் வாழும் மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்வியற் கூறுகளை, அவர்களோடு குறிப்பிட்ட நாட்கள் அல்லது ஆண்டுகள் தங்கி வாழ்ந்து, கள ஆய்வு முறைகளின் மூலம் பெறப்படும் முதன்மையான தரவுகளைக் கொண்டு விளக்கமாக எழுதுவது இனவரைவியலாகும். இனவரைவியல் நோக்கில் ஓர் இலக்கியத்தை அணுகி, அவ்விலக்கியம் காட்டும் மாந்தர்தம் வாழ்வியல் கூறுகளை இனங்கண்டு விளக்குவதும் ஆய்வில் தேவையான ஒன்றாகும்.

### இனவரைவியல் - சொற்பொருள் விளக்கம்

மானிடவியல் கலைச் சொல்லகராதி இனவரைவியல் எனும் சொல்லுக்கு "மனிதவினப் பரப்பு விளக்கவியல்" (சக்திவேல், 1972:25) என்றும், பிரிட்டானிக்கா தகவல் களஞ்சியம் "குறிப்பிட்ட மானிடச் சமுதாயம் ஒன்றினைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி, விவரிப்பு இனவரைவியலாகும்" (அன்பரசன்,2011:15) என்றும், "இனக்குழுவியல் என்பது பண்பாட்டு மானிடவியலின் அடித்தளமாக அமைவது, இது ஓர் இனக்குழு அல்லது ஒரு சமூகத்தைப் பற்றிய விரிவான, முழுவதுமான அறிவினை எடுத்தியம்புவது. "இனக்குழுவியல்" என்னும் பொருளுடைய "Ethnography' என்னும் ஆங்கிலச் சொல் "ethnos', 'graphein' ஆகிய கிரேக்கச் செற்களின் மூலங்களைப் பெற்றது என்பதற்கு இனம் (race), இனக்குழு (ethnic group), மக்கள் (people) என்பது பொருள் 'graphein' என்பதற்கு "எழுதுவது" அல்லது "வரைதல்" (to write) என்பது பொருள். ஆகையால் இனவரைவியல் என்பது ஒரு குறிப்பிட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது" (பக்தவத்சல பாரதி, 2003:117) என்றும் விளக்கமளிக்கப் பெறுகின்றது.

### தமிழ்நாட்டு அறிஞர்களின் கருத்துகள்

மானிடவியல் அறிஞரான பக்தவத்சல பாரதி, "ஒரு தனித்த சமூகத்தின் பண்பாட்டைப் பற்றி மானிடவியலாளர்கள் அச்சமூகத்தாரோடு நீண்ட காலம் ஒன்றி வாழ்ந்து ஆய்வு செய்து அதனை, எழுத்தில் எழுதியளிக்கும் தனிவரைவு நூலே இனவரைவியல் எனப்படும். இத்தகு நீண்ட காலக் களப்பணியில் உற்றுநோக்கிப் பண்பாட்டை விவரிக்கும் தனிவரைவுகளை (monographs) எழுதும் மானிடவியலர்கள் இனவரைவியலர்(ethnographer) எனப்படுவர்" (பக்தவத்சல பாரதி,2005:387 என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "இனவரைவியல் என்பது களப்பணியை அடிப்படையாகக் கொண்ட கண்ணோட்டமாகும். அதாவது, மானிடவியலர் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அல்லது ஏதேனும் ஒரு துணைப் பண்பாட்டைப் பற்றி அப்பண்பாட்டைக் கொண்டிருக்கும் மக்களோடு குறிப்பிட்ட காலம் வரையில் தங்கியிருந்து, அவர்களோடு வாழ்ந்து அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் பங்கேற்று, ஆராய்ந்து வெளிப்படுத்துவது" (2006:2) என்று ஆ.தனஞ்செயன் குறிப்பிட்டுள்ளார்.

### மேலை நாட்டு அறிஞர்களின் கருத்துகள்

"ஓர் இனத்தை அடையாளப்படுத்துவது இனவரைவியலாகும். இது கடந்தகாலம் பற்றியதாக இருக்கலாம். அதாவது, ஒரு குறிப்பிட்ட மக்களை உற்றுநோக்கல் உத்திகள் மூலம் ஆராய்ந்து,

அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் கூறுகளையும், மேலும் பல தகவல்களையும் எடுத்தியம்புவதே இனவரைவியல்'' என்று பெர்டாஸ், பிளம்மெர் (Pertaux, Plunmer) ஆகிய இருவரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இனவரைவியலை உள்ளடக்கிய மானுடவியலை "ஏகாதிபத்தியத்தின் குழந்தை'' என்று காதரின் காஃப் அறிவித்துள்ளார்'' (ஆ.சிவசுப்பிரமணியன், 2009:11) "பல்வேறுபட்ட இனக்குழுக்களின் தொலைநோக்குடைய வாழ்வியல் நெறிகளைக் கூடிய வரையிலும் துல்லியமாகப் பதிவு செய்யும் குறிக்கோள் உடையது இனவரைவியல் ஆகும்'' என்று லெவிஸ்ட்ராஸ் விளக்கமளித்துள்ளார்.

**இனவரைவியல் கூறுகள்**

ஓர் அயற்பண்பாட்டை விளக்க முற்படும்போது எந்த ஒரு சிறந்த இனவரைவியல் தொகுப்பும், பின்வரும் முதன்மையான கூறுகளைப் பற்றி விளக்குவதாக அமையப் பெறுகின்றன (பக்தவத்சல பாரதி. 2003:118-119). அவை, புவிச்சூழல், சுற்றுச் சூழல், காலநிலை, குடியிருப்பு நிலை, பொருள்சார் பண்பாடு, குடும்ப அமைப்பு, திருமண முறை, உறைவிட முறை, வாழ்வியற் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பண்பாட்டு வயமாக்கமுறை, மக்களின் உளவியற் பாங்குகள், மணக்கொடை, மணவிலக்கு முறை, வாழ்க்கைப் பொருளாதாரம், தொழிற்பகுப்பு, உற்பத்திமுறை, நுகர்வு முறை, பங்கீட்டு முறை, பரிமாற்ற முறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறை, அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சடங்குகள், சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், அழகியற் சிந்தனைகள், வழக்காறுகள், ஈமச் சடங்குகள், பிற தொடர்புடைய செய்திகள்எனும் வகையில் இனவரைவியல் கூறுகள் அமையப் பெறுகின்றன.

**குறுந்தொகையில் இனவரைவியல் பதிவுகள்**

இலக்கியம் பண்பாட்டுக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அதனால், இனவரைவியல் ஆதாரங்களில் ஒன்றாக இலக்கியம் காணப்பெறுகிறது. "ஒரு பண்பாட்டைப் பற்றி ஆராய முற்படும் பொழுது, அந்தப் பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் குழுவினர் பின்பற்றும் உறவுமுறைகள், ஒழுங்கு அமைப்புகள், அவர்களின் உணவுமுறைகள், உணவைச் சமைக்க அவர்கள் கையாளும் முறைகள், வாழ்க்கை வட்டச் சடங்குகள் போன்ற பண்பாட்டுக் கூறுகளை ஆராய்வது எவ்வளவு முக்கியமோ அது போன்று, இனவரைவியலார், இலக்கியத்தையும் ஆராய்வது அவசியமானது'' (ஆ.தனஞ்செயன், 2006:12) ஆகும்.

படைப்பாளன் ஒரு படைப்பை உருவாக்கும் பொழுது, அவருடைய கருத்தோடு அவ்வக்கால மக்கள், அவர்களின் சூழல், வாழ்வியல் முறைகள், இயங்கும் இயங்காப் பெருட்கள் ஆகியன தெரிந்தோ, தெரியாமலோ படைப்பில் இடம்பெற்றுவிடுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இதனையே, படைப்பாளி ஒருவன் சுயசிந்தனை என்ற எல்லைக்குள் நின்று மட்டும் ஒரு இலக்கியத்தைப் படைத்துவிட முடியாது. அவனைச் சுற்றியுள்ள புறவுலகின் அசையும் பெருட்கள், அசையாப் பொருட்கள் ஆகிய அனைத்தையம் உற்றுநோக்கி, அவற்றின் தனிப்பட்ட இயல்புகளையும் இயக்கங்களையும் இணைத்து இலக்கியம் படைக்க வேண்டியிருக்கும் (ஆ. சிவசுப்பிரமணியன்,2009:13) என்று குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கிய எட்டுத்தொகை அடிவரையறையை மையமாகக் கொண்டு, ஐந்திணை அடிப்படையில் அகச் செய்யுள்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைக் குடியினரின் இனவரைவியலைப் பெற இயலுகிறது. மேலும் , பத்துப்பாட்டின் மூலம் பாணர்,பொருநர், கூத்தர் ஆகிய இனத்தவரின் இனவரைவியலைப் பெற இயலுகிறது. "சங்ககால மக்களின் வாழ்வியல் முறைகளையும் வரலாற்றையும் சங்க இலக்கியங்களைக் கொண்டே பேசி வருகின்றோம். நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், விழுமியங்கள், வாழ்க்கைமுறைகள், சடங்குகள், தொழில்கள், புழங்குப் பொருட்கள், மக்கள் குழுக்கள், உணவு, ஆடை, விலங்குகள், பறவைகள், நிலை உயிர்கள், ஐம்பூதங்கள் போன்றவை

குறித்த செய்திகளைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இவையனைத்தும் இனவரைவியல் தரவுகள் ஆகும்'' (ஞா.ஸ்டீபன், *2010:16*) எனும் கருத்துக் குறிப்பிடத்தக்கதாகும்.

காலந்தோறும் படைக்கப்பெறும் இலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டையுடைய சமூகத்தைப் பற்றிய இனவரைவியல் செய்திகள் இடம் பெறும் என்பது நிலையான பதிவாக அமைகின்றன.

''வேறு வகையான ஆவணங்கள் எவையும் கிடைக்கப் பெறாத , ஒரு கடந்த காலத்திய சமூகத்தை, அதன் பண்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு, ஆராய்வதற்கு அச்சமூகம் படைத்தளித்த கலை இலக்கிய வடிவங்களையே முக்கிய ஆதாரங்களாகப் பயன்படுத்துவதை ஒரு தவிர்க்கமுடியாத விதிமீறலாக நாம் ஏற்க வேண்டியவர்களாக உள்ளோம்'' என்று குறிப்பிடுகிறார் (ஆ.தனஞ்செயன்,*2006:38*) இவ்வாறாக இலக்கியங்களில் இனவரைவியல் பதிவுகள் காணப்படுவதை அறியமுடிகின்றது. அவ்வகையில் குறுந்தொகையில் குறிஞ்சி நில மக்கள் வேட்டையாடுகின்றனர். (குறுந்.*272*) மலைச்சாரலில் மலைநெல்லை விதைத்து அருவியின் நீர்கொண்டு பயிர் செய்கின்றனர். *(100, 371*). மரத்தை வெட்டிச் சுட்டபின் அந்நிலத்தைக் கொத்திப் பண்படுத்தி தினை, பருத்தி ஆகியவற்றை விதைக்கின்றனர் *(198,72,214*). மலைச்சாரல்களிலிருந்து தேன் சேகரிக்கின்றனர் *(3, 60, 176*). தரைக்கடியிலிருந்து கவரைக்கிழங்கைத் தோண்டியெடுக்கின்றனர் *(233,379*). முல்லை நில மக்கள் கால்நடைகளை வளர்த்தும் வரகு முதலிய புன்செய் நிலப்பயிர் செய்தும் வாழ்கின்றனர் *(358, 221, 220, 282*). மருதநிலத்தில் உழவரும் வினைஞரும் காணப்படுகின்றனர் *(309*). வாளையும் கெண்டையும் உள்ள கழனிகள் காணப்படுகின்றன *(127, 8*). நீர் பாய்ச்சிக் கரும்பு பயிர் செய்வது காணப்படுகிறது *(149*). செந்நெல்லும் வெண்ணெல்லும் காணப்படுகின்றன *(53, 277, 210*). இவற்றுக்கு சிறுகான் யாறு, மழைநீர் நிறைத்த கயம் *(171, 113*), மூலம் நீர்வரத்து நடந்துள்ளது. நெய்தல் நிலத்தில் தூண்டில், வலை, படகு, எறிஉளி முதலியவற்றின் மூலம் மீன் பிடித்து மீனை நெல்லுக்கு மாற்றி உண்கின்றனர் *(269*). பாலை நில மக்கள் வழிப்பறி செய்து பங்கிட்டுக் கொண்டு உண்கின்றனர் *(331*).

குறுந்தொகைப் பாடல்களில் உற்பத்திப் பொருள்களைப் பகிர்ந்துகொண்ட முறை பற்றி (பாலை நில மக்கள் கடறு கூட்டுண்டதைப் பற்றி (குறுந். *331*) கூறியுள்ள ஒரு பாடலைத் தவிர வேறு பாடற்குறிப்புகள் கிடைக்கவில்லை. ஆனால் செல்வர் *(148, 337, 233*), வறியர் *(19*), இல்லோர் *(63, 120, 282*), உள்ளோர் *(283*), இரவலர் *(137*), சீர் இல்வாழ்க்கை *(295*), ஓர் ஆன்வல்சி *(295*), ஓா ஏர்உழவன் *(131*), புனவன் துடவை (தோட்டம்) *(105, 133*), பெரும்புனக் குறவன் *(82*), நம் படப்பை *(98*), எம் இல் *(354*), போன்ற குறிப்புக்களிலிருந்து தனிக்குடும்பமும் தனிச்சொத்துரிமையும் சமுதாயத்தில தலைகாட்டத் தொடங்கி விட்டிருந்த நிலைமையைப் பார்க்கிறோம்.

வாணிபத்தைப் பொறுத்தவரை உப்பை மாற்றி நெல் பெற்றதையும் *(269*), ஊர்ஊராக சாத்துக்களாகச் சென்று வாணிபம் நடத்தியதையும் *(124, 388, 390*) குறுந்தொகைப் பாடல்களில் நாம் காணமுடிகிறது. இவை தவிர வரைவதற்கிடையில் பொருள்வயிற் பிரிவும் கற்புவாழ்க்கையின் போது பொருள்வயிற் பிரிவும் தலைவன் தலைவியருள் ஏற்படுகின்றன. அவ்வேளைகளில் வெளிநாடுகளுக்கும் கடல்கடந்தும் *(11, 228*) சென்று பொருள் ஈட்டி வருகிறான் தலைவன். வாணிபமே பெரும்பாலும் அவன் செய்தது தொழிலாகும் என்று கருத இடமுண்டு. ஆக வாணிபமும் குறுந்தொகை காட்டும் சமுதாயத்தில் ஆரம்ப நிலையில் இருந்தது என்று எண்ணத் தோன்றுகிறது. பண்டமாற்று முறை இருந்தது *9269*) என்பதையும் காசு இருந்தது என்பதையும் அது கிண்கிணி அரி அளவு சிறியதாகவும் வேப்பம்பழம் அளவு பெரிதாகவும் இருந்தது என்பதையும் அறிகிறோம் *(67,148*). அக்காசுகளை மாலையாகக் கோத்து அணித்திருக்கின்றனர். கிண்கிணியின் உள்ளீடாகவும் செய்து உள்ளனர்.

மக்கட் பாகுபாட்டைப் பொறுத்தவரை நில அடிப்படையில் குறவர் *(346*), கானவர் *(322*), புனவர் *(105*), எயினர் *(12*), மறவர் *(297*), கோவலர் *(358*), உழவர் *(10*), இடையர் *(221*), அண்டர்

(117), பரதவர் (304), என்ற பெயர்களும் தொழில் அடிப்படையில் உழவர் (10), தச்சர் (61), கோவலர் (358), பொற்கொல்லர் (67), ஏனல் காவலர் (54), சேணோன் (150), யாமம் காவலர் (375), நாழிகைக் கணக்கர் (261), புலைத்தி (330), போன்ற பெயர்களும் குலமரபுக் குழுக்கள் என்ற அடிப்படையில் கோசர் (73), பூமியர் (163), வேளிர் (164), கொங்கர் (393), சோழர் (116), தொண்டையர் (260), விச்சியர் (328), பாண்டியர் (393) போன்ற பெயர்களும் காணப்படுகின்றன. சமுதாயம் சாதி என்ற அடிப்படையில் பிரிந்திருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் பாடல் எண் 45ல் வால்இழை மகளிர்த் தழீஇய சென்ற (பரத்தையிடம் சென்ற) தலைவனைப் பார்த்துத் தலைவி புரியாமல் குழம்பி நிற்க "இதைப் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கும் இத்திணையில் பிறந்திருப்பது துன்பம் தரத்தக்கதாக உள்ளது" என்று தோழி கூறுகிறாள். ஆகவே குழுவின் சில குடிப்பிரிவுகளில் சில ஒழுக்க விதிகள் கைப்பற்றப்பட்டனவோ என்றும் தனித்தனி ஒழுக்கத்தைக் கைப்பற்றியவர்கள் தனித்தனித் திணையினர் அல்லது குடியினர் என்று அழைக்கப்பட்டனரோ என்றும் நினைக்க வேண்டி உள்ளது. இவ்விடத்தில் பேராசரியர் கா. சிவத்தம்பி அவர்கள் "இலக்கணமும் சமூக உறவுகளும்" என்னும் அவர் எழுதிய நூலில் "குடும்பம், கணம், குடியிருப்பும் என்னும் பொருளைத்தரும் குடி என்னும் பெயர்ச்சொல்லைக் குறிக்கத் "திணை " எனும் சொல் பயன்படுவதற்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன" என்பதையும் அதற்கு மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள பாடல்களில் இப்பாடலும் (குறுந்.45) ஒன்று என்பதையும் குறித்துப் பார்ப்பது உதவியாக இருக்கும். இந்த நிலைமையும் பிற்காலத்தில் தொழில்கள் பரம்பரையாக பிறப்பிலேயே வாய்த்து அவரவர் தொழிலுக்கு ஏற்பச் சிற்சில வேறுபட்ட ஒழுக்கங்கள் அமைந்ததும் அத்தொழில் செய்தவர்களிடையிலேயே மணவினைகள் நடைபெற்றதும்(அகமணம்) சாதிகள் உருவெடுக்கக் காரணங்களாக இருந்தனவோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

தமிழகத்துக் குலமரபுக் குழுக்களின் தலைவர்களாக எவ்வி (19), குட்டுவன் (34), எழினி (80), ஆஅய் (84), பெரும்பூண் பொறையன் (8), அஞ்சி (91), ஒரி (100), சோழன் (116), மலையன் (198), நள்ளி (210), அழிசி (258), விச்சியர் பெருமகன் (328), பசும்பூண்பாண்டியன் (393), அதிகன் (393), ஆகியோர் காணப்படுகின்றனர். ஆட்சியோடு தொடர்பு கொண்ட மன்றம் (46), செங்கோல் அவையம் (376) கட்டில் (335), தானை (328), முரசு (328), நுண்தோல் (கேடயம்) (392), திண்தேர் (128), வில்கெழு தானை (328), நாடு (130), மன்னன் (225), அரசன் (276, 392), வேந்தர் (380) ஆகியவையும் பாடல்களில் தெரிகின்றன. இக்குழுத்தலைவர்களில் அஞ்சி (91), எழினி (80), விச்சியர் (328) ஆகியோர் தம் பகைவர்களோடு போரிட்டதாகக் காட்டப்படுகிறது. ஆக இப்போர்களும் ஆட்சியும் இன்னும் பெருமன்னர்கள் உருவாகவில்லை என்பதையும் குலமரபுக் குழுக்களின் தலைவர்கள் முட்டி மோதி வேந்தர்களாகும் முயற்சியிலும் வேந்தர்கள் மன்னர் மற்றும் அரசர்களாகும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தனர் என்பதையும் தெரிவிக்கின்றன.

குறுந்தொகை காட்டும் மக்கள் பேயைக் கண்டு அஞ்சினர் (161). அதன் பல், யானையின் நகத்தைப் போன்றிருக்கும் என்று பயந்தனர் (180). பெண்களைப் பேய் பிடித்துக் கொள்ளும் என்றும் அச்சப்பட்டனர் (263). ஆட்டுக்குட்டியை அறுத்துப் படையல் வைத்துப் பல தெய்வங்களை வாழ்த்தி பேயோட்ட முயன்றுள்ளர் (263). மலைகளிலும் ஊர் மன்ற மரத்திலும் அச்சம் தரும் தெய்வம் இருப்பதாகவும் நம்பினர் (52, 87, 89, 105, 376). மன்ற மரத்திலுள்ள தெய்வம் கொடியவர்களை வருத்தும் என்ற நம்பினர் (87). தலைவனை நினைத்துத் தலைவி மெலிகின்ற பொழுது வேலன அழைத்து வெறியாட்டு நடத்துவர். அவன் தலைவியை நெடுவேள் அணங்கிற்று என்பான். மறி அறுத்து வெறியாட்டு நடத்துவான். தன் மேல் முருகு வந்திருப்பதாகக் கூறுவான் (111, 362). தாம் வேண்டுவது நிலைவேறச் சூலியை வணங்கிக் கையில் நூலால் காப்புக் கட்டிக்கொள்வர் (218). கொல்லிக் கருங்கண் தெய்வம் எழுதிய நல்லியல் பாவையைத்(89) தவிர வேறு தெய்வ உருவம் பற்றிக் குறுந்தொகையில் இல்லை. குறுந்தொகை காட்டும் மக்கள் உயர்நிலை உலகம் (361), அமிழ்தம் (83), நிரையம் (நரகம்) (292), இம்மை மறுமை (49, 199) ஆகியவற்றில் நம்பிக்கை வைக்க ஆரம்பத்திருக்கின்றனர். "நெய்பெய் தீ போன்று" என்ற தொடர் பாடல் எண்

106 இல் சொல்லப்பட்டுள்ளது. உ.வே.சா. அவர்கள் இதை மணச்சடங்கின்போது நெய் பெய்த தீயின் நினைவு என்று கொள்கிறார். வேள்வி செய்யும் பழக்கம் குறுந்தொகை காட்டும் தமிழகத்தில் வர ஆரம்பித்து விட்டது என்று எண்ண வேண்டியுள்ளது.

குறுந்தொகை காட்டும் மக்கள் விழுமியங்களாக ஏற்றுக் கொண்டுள்ளவற்றை நோக்கும்போது அவர்களுடைய வாழ்க்கையில் தோன்றி வளர்நத ஒழுக்கங்களையும் தனிச்சொத்துரிமையடிப்படையில் வளர்ந்திருந்த கோட்பாடுகளையும் பண்பாடுகளையும் காணமுடிகிறது. இவை பிற்காலத்தில் அறநெறியின் கூறுகளாகப் போற்றப்பட்டன. பொய் கூறுவதை இழிவாகக் கருதினர் (259, 184). பிறர் தமக்குச் செய்த நன்றியை மறக்காமல் அவற்றைப் பேணினர் (225, 115). தன் ஒழுக்கத்தில் வடு ஏற்பட நாணினர் (88,24). பிறர் தம்மைப் புகழும்போது அப்புகழ்ச்சியைக் கேட்க நாணினர் (252). சான்றோரை மதித்து நடந்தனர் (265). இல்லோர் வாழ்க்கை இழிவானது, உள்ள பொருளைச் சிதைக்கக் கூடாதென்றும் கருதினர் (283).. ஒவ்வொரு நாளும் தம்மிடம் இரவலர் வந்து இரக்க வேண்டும் என்று விரும்பினர் (137). கொடுப்பதை நீரொடு சொரிந்து ஈந்தனர் (233). இரந்தோர்க்குக் கொடுத்ததைத் திருப்பித்தா என்று கேட்பதைவிட தம் உயிரை விடுவதையே மேலாகக் கருதினர் (349). எல்லாவற்றுக்கும் மேலாக உலகில் உள்ள எதுவும் நிலையாக நிற்பதில்லை. அப்படி நில்லாமையாக இருப்பது ஒன்றே நிலையான ஒன்று (நில்லாமையே நிலையிற்று) என்று எண்ணினர் (143).

குறுந்தொகை காட்டும் மக்களின் கலைகளைப் பற்றிப் பார்க்கும்போது கோடியர் (78), பாணர் (19, 323) போன்ற கலைஞர்களையும் முரசு (32ம8), முழவு (301), தண்ணுமை (390), பதலை (59), தொண்டகம் (375), குழல் (151), யாழ் (323) போன்ற இசைக்கருவிகளையும் படுமலை (32), விளரி (336) போன்ற பண்களையும் அவர்கள் பயன்படுத்தி வந்திருப்பதைக் காணமுடிகிறது. கொல்லிக்குடவரையில் நல்லியல் பாவையின் ஓவியம் வரையப்பட்டிருந்தது (89). கூத்து என்ற வகையில் துணங்கைக் கூத்து நடந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (31, 364). அக்கூத்தில் ஆண்களும் பெண்களும் கலந்து ஆடி இருக்கின்றனர் (31). விளையாட்டு என்ற வகையில் மகளிர் கடற்கரையில் சிறுமனை கட்டி விளையாடியிருக்கின்றனர் (326). சிறுவர் தச்சன் செய்த சிறு தேரை உருட்டி விளையாடினர் (61). ஆற்றில் புதுவெள்ளம் வரும்போது ஆணும் பெண்ணும் சென்று அதில் விளையாடி இருக்கின்றனர் (358, 80) ஆரியர் பறையறைந்து கயிறாடியதாக ஒரு பாடல் (7) கூறுகிறது. எழுத்தை அறிந்திருந்தனர் என்பதற்கு சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகையே சான்று ஒன்றில் பாதியாகிய (1.2) அரை என்னும் எண்ணிலிருந்து ஒன்பது வரையும் அறிந்திருந்தனர் என்பதை உய்த்துணரலாம் (280,277, 43, 287, 229, 42,129,292). பாடல் எண் 156 இல் தலைவன் பார்ப்பன் நண்பனைப் பார்த்து "எழுதா கற்பின் நின்சொல்லுள்ளும்" என்பதால் பார்ப்பனரின் வேதமும் மந்திரமும் (உ.வே.சா. எழுதாக் கற்பு என்பதற்கு இப்படித்தான் பொருள் கொள்கிறார்). எழுதப்படாமலே வாய்வழியாகவே சொல்லப்பட்டு வந்தன என்று தெரிகிறது.

**முடிவுரை**

இலக்கியத்திலுள்ள செய்திகளின் தொகுப்புகளை இனவரைவியல் கூறுகள், கொண்டு ஆய்வு செய்வதன் மூலம் இலக்கியத்தின் தன்மையையும் அறியஇயலும். மேலும் ஒவ்வொரு இனக்குழுவின் இனவரைவியல் கூறுகளை ஆராய்வதன் வழி அக்குழுவின் மரபுகளையும் அறிய இயலும்.

**துணைநூற்பட்டியல்**


- அன்பரசன், 2011, பெரும்பாணாற்றுப்படை இனவரைவியல், (இளமுனைவர்பட்ட ஆய்வேடு), திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம்.
- சக்திவேல், சு., 1972, மானிடவியல் கலைச்சொல்லகராதி (ஆங்கிலம் - தமிழ்), திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
- சிவத்தம்பி கா., 1999, இலக்கணங்களும் சமுக உறவுகளும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

- சிவசுப்பிரமணியன், ஆ., 2009, இனவரைவியலும் தமிழ் நாவலும், பரிசில் வெளியீடு, சென்னை.
- தனஞ்செயன், ஆ. 2006, விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள் -இனவரைவியல் ஆய்வு, புதுச்சேரி.
- பக்தவத்சல பாரதி, 2003. பண்பாட்டு மானிடவியல். மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
- ..............................., 2005, மானிடவியல் கோட்பாடுகள், புதுச்சேரி. வல்லினம்.
- ஸ்டீபன், ஞா., 2010, தொல்காப்பியமும் இன வரைவியல் கவிதையியலும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.